செ.வெ.எண்: 536 நாள்: 28.08.2020

**புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரியில் கொரோனா பரிசோதனை முடிவுகளை குறுஞ்செய்தி மூலம் அறிந்து கொள்ளலாம்.**

**அனைத்து அரசு மருத்துவக்கல்லூரிகளிலும் கொரோனா பரிசோதனை முடிவுகளை குறுஞ்செய்தி மூலம் அறிவிக்க நடவடிக்கை.**

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

---

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (28.08.2020) புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் அரசு அலுவலர்களுடன் கொரோனா நோய்தடுப்பு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலுக்கிணங்க தமிழகம் முழுவதும் கொரோனா நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை இரவு பகல் பாராமல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொரோனா தடுப்பு பணிகளில் பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் முக்கியமாகும். பொதுமக்கள் அனைவரும் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியை கடைபிடித்தல், கை கழுவுதல் போன்றவற்றை தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும்.

பொதுமக்கள் தங்களுக்கு லேசான இருமல், காய்ச்சல், உடம்புவலி ஏற்படும்பொழுது உடனடியாக அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வர வேண்டும். ஆரம்ப நிலையிலேயே சிகிச்சைக்கு வருபவர்களை கொரோனா தொற்றுலிருந்து 100 சதவீதம் முழுமையாக குணப்படுத்த முடியும். இதன் பயனாக தமிழகத்தில் கொரோனா பாதித்தவர்களில் இதுவரை 3,43,930 பேர் குணமடைந்து வீடு திரும்பி உள்ளனர்.

தமிழகம் முழுவதும் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் ஒரு நாளைக்கு 60,000 முதல் 70,000 வரை கொரோன ஸ்வேப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் கொரோனா பாசிட்டிவ் மற்றும் நெகட்டிவ் முடிவுகள் சம்மந்தப்பட்ட நபர்களுக்கு குறுஞ்செய்தி மூலமாக அனுப்பப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரியில் கொரோனா பரிசோதனை மேற்கொண்டவர்களுக்கு முடிவுகள் கட்டணமில்லாமல் குறுஞ்செய்தி மூலமாக நேற்றைய தினம் முதல் அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது. இதிலும் குறிப்பாக கொரோனா முடிவுகளை சம்மந்தப்பட்டவர்கள் நகல் எடுத்துக்கொள்ளும் சிறப்பான வசதியும் செய்யப்பட்டுள்ளது.

கொரோனா முடிவுகளை குறுஞ்செய்தி மூலம் அறிவிக்கும் முறைகள் சென்னை, மதுரை, சேலம், புதுக்கோட்டை அரசு மருத்துக்கல்லூரிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதேபோன்று அனைத்து மருத்துக்கல்லூரிகளிலும் இம்முறையினை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் உள்ள ஆக்ஸ்போடு பல்கலைக்கழகம் வேக்சின் மருந்திற்கான பரிசோதனை அனுமதியினை சென்னை இராஜீவ்காந்தி அரசு மருத்துவமனை மற்றும் இராமச்சந்திரா பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. இந்த வேக்சின் மருந்தினை ஒருவருக்கு செலுத்தும்பொழுது ஏதேனும் பக்கவிளைவுகள் ஏற்படுகின்றனவா என்பதை கண்டறியக்கூடிய அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்த பரிசோதனை 18 வயதிற்கு மேல் நல்ல உடல்நிலையுடன் உள்ளவர்கள், ஏற்கனவே குடும்பத்தில் யாருக்கும் மற்றும் சம்மந்தப்பட்ட நபருக்கும் கொரோனா பாதிப்பு இல்லாத 150 நபர்களுக்கு வேக்சின் மருந்தினை செலுத்தி இராஜீவ்காந்தி மருத்துவமனையில் அமைக்ககப்பட்டுள்ள குழு இதனை கண்காணிக்கும். மேலும் மருந்து செலுத்துவதற்கான முதற்கட்ட பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 500 எண்ணிக்கையில் புதிய 108 அவசர சிகிச்சை ஊர்தியினை ரூ.103.5 கோடி மதிப்பீட்டில் வாங்க அனுமதி அளித்துள்ளார்கள். இதன் ஒரு பகுதியாக வருகின்ற திங்கள்கிழமை

108 எண்ணிக்கையிலான 108 அவசர சிகிச்சை ஊர்தியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்க உள்ளார்கள். மீதமுள்ள 400 எண்ணிக்கையிலான 108 அவசர சிகிச்சை ஊர்திகள் படிப்படியாக மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். படிப்படியாக அனுப்பப்படும். மேலும் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 5 எண்ணிக்கையிலான 108 அவசர சிகிச்சை ஊர்திகள் வழங்கப்படும்.

பொதுவாக ஒருவருக்கு கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்டால் 3 மணி நேரத்திற்குள் மருத்துவமனைக்கு அழைத்து செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கூடுதலாக அவசர சிகிச்சை ஊர்தி தேவைப்படும் இடங்களுக்கு வழங்கப்படும். 104 கட்டணமில்லா தொலைபேசியில் தொடர்பு கொள்பவர்களுக்கு மனநல ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 104 ஐ தொடர்பு கொள்பவர்கள் கருத்துகள், ஆலோசனைகள் மற்றும் புகார்கள் போன்றவைகளை தெரிவிக்கலாம். இதேபோன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் தனிகட்டுப்பாட்டு மையம் செயல்பட்டு வருகின்றது. இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசினார்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை வருவாய் கோட்டத்தை சேர்ந்த 3 நபர்களுக்கு ஆதரவற்ற விதவை சான்றிதழ்களை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எல்.பாலாஜிசரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் திருமதி.மு.பூவதி, ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் மரு.மரிய லூயிஸ் பெக்கி ஹோம்ஸ், பொது சுகாதார துணை இயக்குநர்கள் மரு.அர்ஜீன்குமார், மரு.கலைவாணி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**